செய்து அம்பாசமுத்திரத்தில் உள்ள கருவூலத்துடன் அதை இணைக்க ஏற்பாடு செய்வதோடு, அந்தத் தவறை திருத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் துணைக் கருவூலத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டிய நிலை வந்தது. காரணம் அம்பாசமுத்திரத்தில் வேலை மிகுதியாக இருப்பதன் காரணமாக அதை இரண்டாகப் பிரித்து சேரன்மாதேவி, அம்பாசமுத்திரம் கருவூலங்கள் என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டது. ஏற்கனவே அம்பாசமுத்திரம் கருவூலத்தில் எந்தெந்தப் பகுதிகள் கவனிக்கப்பட்டு வந்தனவோ அதை இரண்டாகப் பிரித்து ஒரு பகுதி அம்பாசமுத்திரம் கருவூலத்திலும், மறு பகுதி சேரன்மாதேவி கருவூலத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருவூலத்தைப் பிரிப்பதிலே ஏற்பட்டுள்ள சங்கடங்களை இடர்பாடுகளை மனு மூலம் எடுத்துச் சொல்வார்களேயானால், மறுபடியும் வேண்டுமானால் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கலாம். மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உள்ளவர்களைக் கலந்து அவர்களுடைய யோசனையைக் கேட்டு, கருவூலத் துறை இயக்குனர் இதை ஆராயலாம். ஆகவே எந்தெந்தப் பகுதி அம்பாசமுத்திரத்திலும், எந்தெந்தப் பகுதி சேரன்மாதேவியிலும் இருக்கலாம் என்ற விவரக் குறிப்புகளை மாண்புமிகு உறுப்பினர் தருவார்களானால் அதுபற்றி ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

சிலைகள் திருடு போவதைத் தடுத்தல்.

* வினா எண் 185—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிலைகள் திருடு போவதைத் தடுக்க அரசு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

விவர அறிக்கை * அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, இந்தச் சிலைகளைத் திருடி வெளிநாட்டுக்கு கடத்துகின்றவர்கள், நாட்டையும் காட்டிக் கொடுக்கத் தயங்கமாட்டார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு மரண தண்டனை போன்ற தண்டனைகளை

---

* 240-242-ம் பக்கத்தில் இணைப்பு 1 ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS

விதிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். அதேபோன்று சிலைகளை உலோகத்தில் செய்வதற்கு தடை விதிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட திருட்டுக் குற்றங்களில் ஈடுபடுகின்றவர்களுக்கு கடுமையான தண்டனை விதிக்க வேண்டும் என்று குற்றவியல் சட்டத்தைத் திருத்துவதற்கு அரசு முயற்சி எடுத்து வருகிறது. இன்னொரு கேள்வியில் இப்படிப்பட்ட உலோகங்களில் இந்தச் சிலைகளைச் செய்வது தடுக்கப்படுமா என்று கேட்டார்கள். அந்த உரிமைக்குள்ளே நாம் தலையிட முடியாது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டுக் கோவில்களிலே உள்ள மொத்தச் சிலைகள் எத்தனை? அவைகளில் எவ்வளவு சிலைகள் வெளிநாட்டுக்குப் பயணம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன? எவ்வளவு சிலைகள் உள்நாட்டில் ஸ்டாக்கில் இருக்கின்றன என்பதை அறிய இயலுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பல்லாயிரக்கணக்கான கோவில்களும், அதற்குமேல் பல்லாயிரக்கணக்கான சிலைகளும் இருக்கிற காரணத்தால், முழுமையான விவரத்தை தர இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சிலைகள் திருடு போவதைத் தடுக்க அரசு வகுத்துள்ள நடவடிக்கைகள் இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஏற்கனவே பல நூற்றுக்கணக்கான சிலைகள் திருடு போய், அவைகள் வெளிநாட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கேயுள்ள மியூசியத்திலேயும் தனியார் வீடுகளிலேயும் வைக்கப்பட்டுள்ளன. அவைகளை மீட்க இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு விவரமான விடையை இங்கே அவையிலே நான் வைத்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நடந்து முடிந்து இருக்கிற பல்வேறு தகவல்களைக் கேட்டிருக்கிறார்கள், அதைப்பற்றி தனியாகக் கேள்வி போட்டால், அது இந்திய அரசு தொடர்பான சம்பவங்களாக இருக்கிற காரணத்தால், விவரங்களைச் சேகரித்துத் தரமுடியும்.

திரு. ஏ. சி. சண்முகம் ; பேரவைத் தலைவர் அவர்களே, சில சிலைகள் உள்நாட்டில் இருந்து வெளிநாட்டிற்கு கடத்தப்பட்டு இருக்கின்றன. சில சிலைகள் வெளிநாட்டில் இருந்து

1981 பிப்ரவரி 5]

உள்நாட்டுக்கு கடத்தப்பட்டு வருகின்றன. அமெரிக்காவில் இருந்து லிங்கன் சிலை தமிழ் நாட்டிற்கு வந்து இருப்பதாக அறிகிறேன். அதைப் பற்றி இந்த அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்வி கோவில் களில் உள்ள சிலைகளைப் பற்றியதாகும். லிங்கன் சிலை கோவி லில் வைப்பது இல்லை.

* வினா எண். 186— திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் தாலூக்கா, பூம்பாறையில் அருள்மிகு குழந்தைவேலப்பர் கோவிலில் இருந்த சிலைகள் 1977-ல் திருடு போய் விட்டனவா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது?

(இ) அந்தச் சிலைகளை மீண்டும் கோயிலில் வைக்க ஏற் பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) (ஆ) மற்றும் (இ): கொடைக்கானல் தாலூக்கா பூம்பாறையிலுள்ள அருள்மிகு குழந்தைவேலப்பர் கோவிலில் பார்வதி, பரமசிவன், வள்ளி யம்மன், தெய்வானை, அப்பர், சுந்தரர் ஆகிய ஆறு ஐம்பொன் சிலைகள் 9—8—1977 அன்று இரவு திருடு போய்விட்டன. மேற்படி களவு குறித்து கொடைக்கானல் காவல் நிலையத்தில் புகார் பதிவு செய்யப்பட்டு, 11—2—1978 அன்று ஆறு பேர்களை காவல் துறையினர் கைது செய்து மேற்படி சிலைகளையும் கைப் பற்றியுள்ளனர். குற்றவாளிகள்மீது மதுரை மாவட்ட மாஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது. வழக்கு முடிந்த பிறகு சிலைகளை மீண்டும் கோவிலில் வைக்க ஏற்பாடு செய்யப் படும்.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகப் பழமையானதும், சேர மன்னனால் கட்டப்பட்டதுமான அந்த மிகப்பழமையான கோவிலில் இருந்து களவாடப்பட்டுச்சென்ற சிலையின் மதிப்பு என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, களவுபோன சிலையைப் பற்றிய மதிப்பை தொல் பொருள் ஆய்வுத் துறை தோராயமாக சுமார் 4 இலட்சம் ரூபாய் இருக்கும் என்று மதிப்பிட்டு இருக்கிறது.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது: தலைவர் அவர் களே, கடல் கடந்து சென்ற நடராஜர் சிலையை மீண்டும் தமிழ் நாட்டிற்குக் கொண்டுவர அரசு என்ன நடவடிக்கை எடுத் துள்ளது?